to completely change the number of years for the school course and if so, whether they would change the syllabi according to the wishes of the students?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாணவர்கள் அப்படிப்பட்ட விண்ணப்பங்கள் தந்தார்கள் என்று இல்லை. பொதுவாகவே, சிலபஸில் மாற்றம் வேண்டும் என்று பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் அவற்றை ஆராய்ந்து வருகிறார்கள். 10-வது வரையிலா, 11-வது வரையிலா என்பதை யெல்லாம் ஆராய்ந்து அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுப் பார்கள். திட்டக் குழுவின் அடிப்படையில் 'டாஸ்க் போர்ஸ்' என்கிற பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் ஆராய்ந்து அறிக்கை கொடுத்த பிறகு அரசாங்கம் அதை ஆராய்ந்து முடிவு எடுக்கும்.

தமிழ்நாட்டில் பொம்மைக் கண்காட்சி

* 221 வினா.—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பொம்மைக் கண்காட்சி அமைக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், எங்கு எப்போது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) அரும் பொருட்காட்சி மனையில் புதிதாக கட்டடம் கட்டி இப்பொம்மைக் கொலு வைக்கலாம் என்று உத்தேசிக்கப் பட்டுள்ளது.

ஊராட்சி வளர்ச்சிக்காகத் தனித்துறை

* 222 வினா.—திரு. க. துரைசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் உள்ள சமுதாய-நலத்திட்ட அமைப்பைப் பிரித்து தனி அதிகாரியின்கீழ் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம் மாவட்ட அளவிலும் கோட்ட அளவிலும் ஊராட்சி வளர்ச்சிக்காகத் தனித் துறை ஒன்று ஏற்படுத்துவது குறித்த செயற்குறிப்பு நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.